Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# தமிழ் மக்கள் குரல்

tamilmakkalkurall@gmail.com

தினசரி காலை நாளிதழ்

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 சென்னை | தினசரி | 4 பக்கம் புதன், டிசம்பர் 04, 2024 இதழ் 235

## கிருஷ்ணகிரி மலையிலிருந்து திடீரென உருண்டு வந்த ராட்சத பாறை; வீட்டின் சுற்றுச்சுவர் மீது விழுந்து நின்றது அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய குடும்பத்தினர்



சென்னை, 04 டிசம்பர் 2024: கிருஷ்ணகிரி மலையிலிருந்து திடீரென உருண்டு வந்த ராட்சத பாறை ஒன்று வெங்கடாசலம் என்பவர் வீட்டின் சுற்றுசுவர் மீது விழுந்தது. இதில் அந்த வீட்டில் இருந்தவர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினர்.

பெஞ்ஜல் புயல் காரணமாக கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் கனமழை கொட்டியது. இதனால் ஊத்தங்கரையில் ஏரி நிரம்பி வழிந்து ஊருக்குள் தண்ணீர் புகுந்ததால் 50-க்கும் மேற்பட்ட வாகனங்கள் ஆற்றில் அடித்து செல்லப்பபட்டன. 20-க்கும் மேற்பட்ட கிராமங்கள் துண்டிக்கப்பட்டது.

இந்த நிலையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நேற்று சாரல் மழை பெய்தது. ஆங்காங்கே மழை நீர் சாலைகளில் தேங்கி நின்றது.தொடர் மழை காரணமாக கிருஷ்ணகிரி பழைய பேட்டையில் உள்ள கிருஷ்ணகிரி மலையில் இருந்து இன்று காலை திடீரென்று ராட்சத பாறை ஒன்று சரிந்து விழுந்தது. இந்த பாறை அடிவாரத்தில் உள்ள மேல்தெருவில் வசித்து வரும் வெங்கடாசலம் என்பவர் வீட்டின் சுற்றுசுவர் மீது விழுந்தது. அதிர்ஷ்டவசமாக அந்த பாறை வெங்கடாசலத்தின் வீட்டின் பின்புறமுள்ள சுற்றுசுவர் மீதும், அந்த சுவரின் அருகில் இருந்த மற்றொரு பாறைமீது மோதி தடுத்து நின்றதால், வீட்டில் வெங்கடாசலத்தின் மனைவி மற்றும் 2 குழந்தைகள் உயிர் தப்பினர்.

அந்த மேல் தெருவில் 20-க்கும் மேற்பட்டோர் குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அவர்களும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். பாறை உருண்டு விழுந்தபோது பயங்கர சத்தம் கேட்டதால் வெங்கடாசலம் குடும்பத்தினர், அந்த பகுதியில் வசித்து வந்த பொதுமக்களும் வீட்டுகளை விட்டு வெளியே ஓடி வந்தனர். இதுகுறித்து அப்பகுதி பொதுமக்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் தாசில்தார் வளர்மதி, போலீஸ் துணை சூப்பிரண்டு முரளி மற்றும் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து மலையில் இருந்து சரிந்து விழுந்த பாறையை பார்வையிட்டனர்.

இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், , மாவட்டத்தில் பெய்த கனமழை காரணமாக மலையில் இருந்து இந்த ராட்சத பாறை உருண்டு வந்து விழுந்துள்ளது என்பது தெரியவந்தது. இந்த ராட்சத பாறையை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும் என்று கூறினர்.

இதைத்தொடர்ந்து அடிவார பகுதிகளில் வசித்து வரும் பொதுமக்களையும், அவர்களது உடைமைகளையும் போலீசார், தீயணைப்பு துறையினர், மாவட்ட பேரிடர் மீட்பு பணி குழுவினர் பத்திரமாக மீட்டு வருகின்றனர். மேலும், அடிவார பகுதியில் 20-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருவதால், அவர்களது குடியிருப்புகளுக்கு இடையே விழுந்த ராட்சத பாறையை எவ்வாறு அகற்றுவது என்பது குறித்து மாவட்ட நிர்வாகத்தினர் தொடர்ந்து ஆலோசனை நடத்தி வருகின்றனர். இந்த பாறை மேலும் உருண்டு விழுந்து சாலை வரை வந்திருந்தால் அடுத்தடுத்து உள்ள 20-க்கும் மேற்பட்ட வீடுகளில் வசிக்கும் பொதுமக்கள் உடல் நசுங்கி பலியாகி இருப்பார்கள். அந்த பாறை சுவற்றின் மீது மோதி நின்றதால் அதிர்ஷ்வடசமாக பெரும் விபத்து தவிர்க்கப்பட்டுள்ளது.

## அ.தி.மு.க.வுக்கு இரட்டை இலை சின்னம் ஒதுக்க எதிர்ப்பு 4 வாரங்களில் முடிவு எடுக்க தேர்தல் ஆணையத்துக்கு ஐகோர்ட் உத்தரவு



சென்னை, 04 டிசம்பர் 2024: அண்ணா தி.மு.க.,வுக்கு இரட்டை இலை சின்னம் ஒதுக்க எதிர்ப்பு தெரிவித்த விண்ணப்பத்தின் மீது 4 வாரங்களில் முடிவு எடுக்க தேர்தல் ஆணையத்துக்கு ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

அண்ணா தி.மு.க.வின் உட்கட்சி விவகாரத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் முடிவுக்கு வரும் வரை, சின்னத்தை யாருக்கும் ஒதுக்ககூடாது என தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிடக்கோரி திண்டுகல்லை சேர்ந்த சூர்யமூர்த்தி என்பவர் சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இதுதொடர்பான அந்த மனுவில், அண்ணா தி.மு.க., உட்கட்சி விவகாரம், தொடர்பாக, 2017 முதல் 2022 வரை தேர்தல் கமிஷனுக்கு புகார்கள் அளித்துள்ளேன். இது தொடர்பாக தாக்கல் செய்திருக்கும் சிவில் வழக்குகள் முடிவுக்கும் வரும் வரை இரட்டை இலை சின்னத்தை அ.தி.மு.க.வுக்கு ஒதுக்கக் கூடாது என தேர்தல் கமிஷனுக்கு அளித்த புகார் மனுவுக்கு இதுவரை எவ்வித பதிலும் இல்லை என குறிப்பிட்டிருந்தார். மேலும் தனது மனு மீது விசாரணை நடத்த தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என்றும் அதில் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை நீதிபதிகள் சுப்பிரமணியன் மற்றும் குமரப்பன் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, கடந்த பிப்ரவரி மாதம் அளித்த விண்ணப்பம் மீது ஏன் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என நீதிபதிகள் கேள்வி எழுப்பி இருந்தனர். அதற்கு பதிலளித்த தலைமை தேர்தல் ஆணையம் தரப்பு வழக்கறிஞர், ஒரு வாரத்தில் இந்த விண்ணப்பம் மீது உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று தெரிவித்தார். இதை பதிவு செய்துகொண்ட நீதிபதிகள், விசாரணையை ஒத்தி வைத்திருந்தனர்.

இந்நிலையில் இந்த மனு நீதிபதிகள் சுப்பிரமணியன், குமரப்பன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணை நடைபெற்றது. அப்போது, சூர்யமூர்த்தியின் மனு தொடர்பாக அண்ணா தி.மு.க.விற்கு நோட்டீஸ் அனுப்பி பதிலை பெற்றுள்ளோம் என தேர்தல் ஆணையம் விளக்கம் அளித்தது. அதேநேரம், தங்கள் தரப்பையும் கேட்ட பின்னரே முடிவு எடுக்க உத்தரவிட வேண்டும் என ஓ.பன்னீர் செல்வம் தரப்பும் கோரிக்கை மனுவை தாக்கல் செய்து இருந்தது.

அதையும் விசாரித்த ஐகோர்ட் நீதிபதிகள் அனைத்து தரப்பினரின் கருத்துகளையும் கேட்டறிந்து, அண்ணா தி.மு.க.வுக்கு சின்னம் ஒதுக்கக் கூடாது என்ற மனுவின் மீது 4 வாரங்களில் முடிவு எடுக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தனர்.

## மகாராஷ்டிரா முதல்வராக நாளை பதவி ஏற்கிறார் தேவேந்திர பட்னவீஸ்



சென்னை, 04 டிசம்பர் 2024: மகாராஷ்டிர முதலமைச்சராக தேவேந்திர பட்னவீஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார். பதவியேற்பு விழா நாளை மும்பை ஆசாத் மைதானத்தில் நடைபெறுகிறது.

பாஜக சட்டமன்ற கட்சித் தலைவரை தேர்வு செய்வதற்கான எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் இன்று காலை மும்பை விதான் பவனில் நடைபெற்றது. இந்த கூட்டத்துக்கான மத்திய பார்வையாளர்களாக மத்திய நிதி அமைச்சரும் பா.ஜ.க. மூத்த தலைவருமான நிர்மலா சீதாராமனும், குஜராத் முன்னாள் முதல்வரும் பஞ்சாப் மற்றும் சண்டிகர் பா.ஜ.க. பொறுப்பாளருமான விஜய் ரூபானி ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இந்த கூட்டத்தில் கட்சியின் சட்டமன்றக் குழு தலைவராக தற்போதைய துணை முதலமைச்சர் தேவேந்திர பட்னவீஸ் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மும்பையில் இன்று மாலை கவர்னர் சி.பி. ராதாகிருஷ்ணனை சந்தித்து ஆட்சியமைக்க உரிமை கோருகிறார் தேவேந்திர பட்னவீஸ்.

நாளை மாலை 5 மணி அளவில் மும்பையில் உள்ள ஆசாத் மைதானத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் முதல்வராக அவர் பதவியேற்க உள்ளார். இவ்விழாவில் பிரதமர் மோடி, மத்திய அமைச்சர்கள் அமித்ஷா, ஜெ.பி.நட்டா, ராஜ்நாத் சிங், நிதின் கட்கரி உள்ளிட்டோர் கலந்து கொள்கிறார்கள்.

முக்கிய கூட்டணிக் கட்சிகளான ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவசேனை, அஜீத் பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரசுக்கு துணை முதலமைச்சர் பதவி வழங்கப்பட இருப்பதாக தெரிகிறது. ஒரு வாரமாக யார் முதல்வர் என நீடித்த வந்த இழுபறி முடிவுக்கு வந்தது.




## சந்தீப் ராய் ரத்தோர், காவல் துறை இயக்குநர், பயிற்சி சேலம் காவல் பயிற்சி பள்ளிக்கு சென்று அங்கே மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஏற்பாடுகள் குறித்து நேரில் ஆய்வு செய்தார்



சென்னை, 04 டிசம்பர் 2024: தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வாணையம் தமிழ்நாடு காவல் துறைக்கு இரண்டாம்நிலை காவலர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்வு நடத்தியது. அதன்படி 2665 நபர்கள் [வழக்கமான - 2598 (ஆயுதப்படை பெண் - 779 & தமிழ்நாடு சிறப்பு காவல் படை ஆண் - 1819] மற்றும் (பின் தங்கிய - 67 (ஆயுதப்படை பெண் - 13, ஆயுதப்படை ஆண் - 12 & தமிழ்நாடு சிறப்பு காவல் படை ஆண்கள்- 42) இரண்டாம் நிலை காவலர்களாக பணியமர்த்தப்பட்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 27.11.2024 அன்று தேர்வு செய்யப்பட்டவர்களுக்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார். புதிதாக தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு 7 மாத கால அடிப்படை பயிற்சியும் மற்றும் ஒரு மாத கால நடைமுறை பயிற்சியும் அளிக்கப்படும். இப்பயிற்சியானது திருவள்ளூர், வேலூர், விழுப்புரம், திருச்சி, சேலம், கோவை, மதுரை மற்றும் தூத்துக்குடி ஆகிய 8 நிரந்தர காவலர் பயிற்சி பள்ளிகளில் அளிக்கப்படும்.

மொத்தம் தேர்வு செய்யப்பட்ட 2665 காவலர்களில் 792 பெண் ஆயுதப்படை காவலர்களுக்கு திருவள்ளூர் (300), வேலூர் (200) மற்றும் விழுப்புரம் (292) மற்றும் 1861 ஆண் தமிழ்நாடு சிறப்பு காவல் படை காவலர்களுக்கு மற்றும் பின்தங்கிய ஆயுதப்படை ஆண் காவலர்கள் 12 சேர்த்து மதுரையில் (389 பேர்), தூத்துக்குடி (512), சேலம் (422), திருச்சி (350) மற்றும் கோவை (200) பயிற்சி அளிக்கப்படும்.

அடிப்படை பயிற்சியின் போது, பயிற்சி காவலர்களுக்கு வெளிப்புற மற்றும் உட்புற நடவடிக்கைகள் சம்மந்தமான பயிற்சி அளிக்கப்படும். வெளிப்புற செயல்பாடுகளில் உடல் பயிற்சி, கவாத்து அணிவகுப்பு, துப்பாக்கி சூடு, கமாண்டோ பயிற்சி, ஜங்கிள் பயிற்சி போன்றவை அடங்கும் மேலும் உட்புற செயல்பாடுகளில் சட்டம், கைரேகை, முதலுதவி, அறிவியல் சார்ந்த புலனாய்வு, உளவியல், வாழ்க்கை நெறிமுறைகள் மற்றும் வாழ்க்கை சமநிலை போன்றவையும் அளிக்கப்படும்.

மேற்கண்ட தேர்வு செய்யப்பட்ட பயிற்சி காவலர்களுக்கு 04.12.2024 முதல் துவங்க உள்ள பயிற்சிக்கு, காவல் பயிற்சி பள்ளிகளில் அனைத்து தேவையான அம்சங்களும் முன்கூட்டியே தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலும், திரு. சந்தீப் ராய் ரத்தோர், இ.கா.ப., காவல்துறை இயக்குநர், பயிற்சி, அவர்களின் உத்தரவின்பேரில் 8 காவல் பயிற்சி பள்ளிகளிலுள்ள உட்புற மற்றும் வெளிப்புற பயிற்றுனர்களுக்கு முதல்முறையாக "பயிற்றுனர்களுக்கான பயிற்சியை" மதுரை காவல் பயிற்சி பள்ளியில் 25.11.2024 முதல் 30.11.2024 வரை நடத்தப்பட்டது. பயிற்சி காவலர்களுக்கு பயிற்சியை திறம்பட நடத்துவதற்கும் அவர்களின் திறனை மேம்படுத்துவதற்கும் இப்பயிற்சி நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் சுமார் 158 உட்புற மற்றும் வெளிப்புற காவல் ஆளிநர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்கள்.

திரு. சந்தீப் ராய் ரத்தோர், இ.கா.ப., காவல் துறை இயக்குநர், பயிற்சி, அவர்கள் 03.12.2024 அன்று சேலம் காவல் பயிற்சி பள்ளிக்கு சென்று அங்கே மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஏற்பாடுகள் குறித்து நேரில் ஆய்வு செய்தார். பயிற்சி காவலர்களுக்கான அடிப்படை பயிற்சியை திறம்படவும், வெற்றிகரமாகவும் நடத்துவதற்கான அனைத்து ஆயத்த ஏற்பாடுகளும் 8 காவல் பயிற்சி பள்ளிகளிலும் செய்யப்பட்டு பயிற்சியை துவக்க தயார் நிலையில் உள்ளன.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

தமிழ் குரல் மக்கள்

உள்ளது உள்ளபடி

# அடுத்த தலைமுறையை #மேக்மணிமேட்டர் என ஊக்குவிக்கும் புதிய இளைஞர் திட்டத்தை வெளியிட்ட எச்டிஎஃப்சி ஸ்கை

சென்னை, 04 டிசம்பர் 2024: இந்தியாவின் முதன்மையான தள்ளுபடி தரகு தளங்களில் ஒன்றான எச்டிஎஃப்சி ஸ்கை ஆனது அடுத்த தலைமுறை மற்றும் மில்லினியல்களுக்கு முன்னேற்றம் அளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட தனது அற்புதமான இளைஞர் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த தனித்துவமான முன்முயற்சியானது, அதிக அறிவு மற்றும் நம்பிக்கையுடன் நிதிச் சந்தைகயில் இளைஞர்கள் களமாடுவதற்கு தேவையான அத்தியாவசிய கருவிகள், அறிவு, வாய்ப்புகள் மற்றும் ஆதாரங்களுடன் இளைஞர்களை முன்னேற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இதுகுறித்து எச்டிஎஃப்சி செக்யூரிட்டிஸின் சிஓஓ & சிடிஓ ஆன சந்தீப் பரத்வாஜ் பேசுகையில், "எங்கள் இளைய முதலீட்டாளர்கள், குறிப்பாக 18 முதல் 25 வயதிற்குட்பட்டவர்கள், இந்தியாவின் மக்கள்தொகை நிலப்பரப்பின் மாறும் மற்றும் உருமாறும் பிரிவை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். ஆன்லைன் உதவிக்குறிப்புகள் மற்றும் உடனடி வெற்றிக்கான வாக்குறுதி ஆகியவை கவர்ச்சிகரமானதாக இருந்தாலும், நம்பகமான ஆராய்ச்சியில் அவர்கள் நம்பிக்கை வைப்பது முக்கியம்" என்றார். "பங்குச் சந்தையின் சிக்கல்களை வழிசெலுத்துவதற்கு சந்தைப் போக்குகள், பயனுள்ள இடர் மேலாண்மை மற்றும் பல்வேறு உத்திகள் பற்றிய விரிவான புரிதல் தேவை. இந்த திறன்கள் கல்வியின் மூலம் சிறப்பாக உருவாக்கப்படுகின்றன. உதவிக்குறிப்புகளை நம்புவது தவறான தகவலறிந்த முடிவுகள் மற்றும் குறிப்பிடத்தக்க நிதி பின்னடைவுகளுக்கு வழிவகுக்கும். ஆகவே, எச்டிஎஃப்சி ஸ்கை வழியாக கிடைக்கும் ஆராய்ச்சிப் பரிந்துரைகளைப் பயன்படுத்தவும், ஸ்கை லேர்ன் என்ற எங்கள் கற்றல் தொகுதி மூலம் அவர்களின் நிதி அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்தவும் எங்கள் இளைஞர்களை நாங்கள் வலுவாக ஊக்குவிக்கிறோம்," என்று அவர் வலியுறுத்தினார்.

25 வயதுக்குட்பட்ட வாடிக்கையாளர்களுக்காக வடிவமைக்கப்பட்ட புதிய யூத் திட்டம் இளம் முதலீட்டாளர்களுக்கு ஒரு சிறப்பான வாய்ப்பை வழங்குகிறது. ஈக்விட்டி, டெரிவேடிவ்கள், மியூச்சுவல் ஃபண்டுகள், எக்ஸ்சேஞ்ச் டிரேடட் ஃபண்டுகள், கரன்சி மற்றும் கமாடிட்டிகள் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் தரகு அல்லது கணக்கு பராமரிப்புக் கட்டணங்கள் இல்லாமல், இந்தத் திட்டம் இளம் முதலீட்டாளர்களை அதன் முதல் ஆண்டில் கூடுதல் செலவுகள் இல்லாமல் டெலிவரி மற்றும் இன்ட்ராடே வர்த்தகத்தில் ஈடுபட உதவுகிறது. யூத் திட்டத்தின் அனைத்து அம்சங்களையும் வாடிக்கையாளர்கள் பெயரளவு கட்டணமான ரூ.499 ஆண்டுக்கு செலுத்தி பயன்பெறலாம். முக்கிய சலுகையாக, இளைஞர்களுக்காக வடிவமைக்கப்பட்ட பிரத்யேக வழிகாட்டுதலால் பயனடைவார்கள், இது எங்கள் உள் நிபுணர்களால் வழங்கப்படுகிறது. இளம் மற்றும் புதிய முதலீட்டாளர்கள் சந்தைகளில் வெற்றிகரமாகச் செல்ல உதவும் நிபுணர் ஆராய்ச்சிப் பரிந்துரைகளை உள்ளடக்கிய ஒரு நடைமுறை, செயல்படக்கூடிய பயணத்தை இந்த வழிகாட்டுதல் உள்ளடக்கும்.

நிதி அறிவு மற்றும் திறன்களை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்ட எங்களின் ஸ்கை லேர்ன் முயற்சியின் ஒரு பகுதியாக, எச்டிஎஃப்சி ஸ்கை ஆனது இளைஞர்களுடன் ஈடுபடும் வகையில் பல்வேறு தகவல் உள்ளடக்கங்களை வெளியிட்டுள்ளது. உள்ளடக்கமானது ப.ப.வ.நிதிகள், எம்டிஎஃப்கள், வழித்தோன்றல்கள், பங்கு ஷிமிறிகள், மிறிளிகள், பரஸ்பர நிதிகள் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கியது. கூடுதலாக, பயனர்கள் பிரத்தியேக வெபினார், அறிவுறுத்தல் வீடியோக்கள், மதிப்புமிக்க கற்றல் கருவிகள் மற்றும் நிபுணர்களுடன் கலந்துரையாடல் ஆகியவற்றிலிருந்து பயனடைவார்கள். எச்டிஎஃப்சி ஸ்கை அதன் பயனர்களுக்கு அவர்களின் நிதி அறிவு மற்றும் நம்பிக்கையை விரிவுபடுத்த தேவையான ஆதாரங்களை வழங்க உறுதிபூண்டுள்ளது.

# மைக்ரோலேண்ட் அறக்கட்டளை மற்றும் கே எம் எஃப் ஆகியவை உலக ஊனமுற்றோர் தினத்தை முன்னிட்டு நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு கண்ணியமான தொகுப்பை விநியோகிப்பதன் மூலம் சமூகத்தில் ஆரோக்கியத்தைக் கொண்டாடுகின்றன




கோயம்புத்தூர், 04 டிசம்பர் 2024: நீண்டகால நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் பராமரிப்பை உறுதி செய்வதற்கான ஒரு குறிப்பிடத்தக்க படியாக, மைக்ரோலேண்ட் அறக்கட்டளை, கோத்தகிரி மெடிக்கல் பெல்லோஷிப் (கேஎம்எஃப்) மருத்துவமனையுடன் இணைந்து, நோயாளிகள் மற்றும் பராமரிப்பாளர்ளுக்காக டிசம்பர் 3, 2024 உலக ஊனமுற்றோர் தினம் அன்று ஒரு நாள் நோயாளிகளை பராமரிப்பவர்களை பாராட்டும்விதமானாக கொண்டாட ஏற்பாடு செய்துள்ளது இந்த நிகழ்வு சமூகத்தில் ஆரோக்கியத்தைக் கொண்டாடியது மற்றும் குறிப்பிடத்தக்க தைரியம் மற்றும் விடாமுயற்சியுடன் கடினமான காலங்களை எதிர்கொள்ளும் பராமரிப்பாளர்கள் மற்றும் நோயாளிகளின் பொறுமையைப் பாராட்டும்விதமாக அமைந்தது மைக்ரோலேண்ட் அறக்கட்டளை நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு கண்ணியமான தொகுப்புகளை விநியோகித்தது. மைக்ரோலேண்டின் 35வது ஆண்டு விழாவில் இந்தக் தொகுப்புக்கான தொகை சேகரிக்கப்பட்டது . இந்த மைல்கல்லின் போது, □□□□ ஊழியர்கள் சந்தர்ப்பத்திற்கு உயர்ந்து, சமூகத்திற்குத் திரும்பக் கொடுக்கும் வாய்ப்பைத் கொடுத்தது, மேலும் மைக்ரோலேண்ட் ஒரு பொருந்தக்கூடிய மானியத்தைச் சேர்ப்பதன் மூலம் இந்த காரணத்தை மேலும் ஆதரித்தது. இந்த முன்முயற்சி மைக்ரோலாண்டின் 'கொடுக்கும் கலாச்சாரத்தின்' ஒரு பகுதியாகும், இது மைக்ரோலேண்டின் கட்டமைப்பின் குறிப்பிடத்தக்க பகுதியாகும், இது ஊழியர்களை சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவும், பின்தங்கியவர்களை மேம்படுத்தவும், சுற்றுச்சூழலைக் கவனித்துக்கொள்ளவும் ஊக்குவிக்கிறது. மைக்ரோலேண்ட் அறக்கட்டளை மற்றும் கே எம் எஃப் இலிருந்து கண்ணியமான கருவிகளைப் பெறும் பயனாளிகள், இதில் ஊட்டச்சத்து சப்ளிமெண்ட்ஸ், ஆரோக்கிய பொருட்கள், சுகாதாரப் பொருட்கள் மற்றும் முதலுதவி அத்தியாவசியப் பொருட்கள் ஆகியவை அடங்கும்.

மைக்ரோலேண்ட் அறக்கட்டளை, கோத்தகிரி மெடிக்கல் பெல்லோஷிப் (கே எம் எஃப்) மருத்துவமனையுடன் இணைந்து, நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் மற்றும் அவர்களின் பராமரிப்பாளர்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களுக்கு ஏற்ப, உடல் அசௌகரியம் மற்றும் மன உளைச்சல் ஆகியவற்றை நிவர்த்தி செய்ய வடிவமைக்கப்பட்ட நோயாளிகளை மையமாகக் கொண்ட திட்டத்தை ஆதரிக்கிறது. தொலைதூர பகுதிகளில் உள்ள இந்த நோயாளிகளுக்கு கண்ணியம் தொகுப்புகள் வழங்கப்பட்டன. மேலும் இந்த தொகுப்பில் போர்வைகள், ஊட்டச்சத்து சப்ளிமெண்ட்ஸ் மற்றும் தினசரி சுகாதாரத் தேவைகள் உள்ளிட்ட அத்தியாவசிய ஆரோக்கிய பொருட்கள்கொடுக்கப்பட்டுள்ளன, இவைகள் அவர்களின் ஆரோக்கியம் மற்றும் புண்கள் மற்றும் காயங்களை குணப்படுத்துவதற்கு உதவுகின்றன.

கே எம் எஃப் இன் மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர் டோனி ஆபிரகாம் தாமஸ், இந்தத் திட்டத்தைப் பற்றிப் பேசுகையில், "இந்தத் திட்டம், நோயாளிகள் மிகவும் வசதியாக இருக்கும் வீட்டிலேயே, ஒரு தடையற்ற தொடர்ச்சியான கவனிப்பு ஆகும். வீட்டு அடிப்படையிலான பராமரிப்பு, மருந்துகள், ஊட்டச்சத்து , மருத்துவ சாதனங்கள் மற்றும் தேவைப்படும் போது வீட்டில் மாற்றங்கள் கூட இந்தத் திட்டத்தின் மூலம் நோயாளிகளுக்கு வழங்கப்படுகின்றன. நோயாளியைப் பராமரிப்பவர்களாக இருக்கும் குடும்ப உறுப்பினர்கள் அல்லது திறமையான செவிலியர்களால் சரியான நேரத்தில் கவனிப்பை வழங்குவதற்கும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் பயிற்சியளிக்கப்படுகிறது. தற்போது, □□இந்தத் திட்டம் 20 கிமீ சுற்றளவில் 200 நோயாளிகளுக்குச் சேவை செய்கிறது. மேலும் வீட்டு ஆலோசனை சேவையானது தொலைபேசியில் அவர்களை தொடர்பு கொண்டு அவர்களின் உடல்நிலை தொடர்ந்து கண்காணித்து அவர்களை அக்கறையுடன் கூர்ந்துநோக்குகின்றது. இவ்வாறு நோயாளிகளை தொடர்ந்து கண்காணிக்கும் போது நோயாளிகளின் தேவைக்கு ஏற்ப மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சையும் அளிக்கப்படுகின்றது. மேலும் இந்த சேவையானது மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயல்படுகின்றது மைக்ரோலேண்ட் அறக்கட்டளையின் அறங்காவலர் கல்பனா கர், இது போன்ற முயற்சிகளில் ஒத்துழைப்பதில் தங்கள் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறார், "பயம் மற்றும் தனிமையில் இருந்து கண்ணியம் மற்றும் கருணை ஆகியவற்றிற்கு மாறுவதற்கான கதைகள் இந்த முயற்சிக்கான எங்கள் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகின்றன. இந்த நிகழ்வு நீலகிரியில் உள்ள பழங்குடியினரின் வாழ்க்கையை மேம்படுத்த மைக்ரோலேண்ட் அறக்கட்டளை மூலம்"மேற்கொள்ளப்படும் பெரிய முயற்சியை எடுத்துக்காட்டுகிறது."

# மிர்ச்சி சிவா நடிக்கும் 'சூது கவ்வும் 2' படத்தின் முன்னோட்டம் வெளியீடு



சென்னை, 04 டிசம்பர் 2024: திருக்குமரன் என்டர்டெய்ன்மென்ட் & தங்கம் சினிமாஸ் நிறுவனங்களின் தயாரிப்பில் எஸ். ஜே. அர்ஜுன் இயக்கத்தில் மிர்ச்சி சிவா முதன்மை கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் 'சூது கவ்வும் 2' திரைப்படத்தின் முன்னோட்டம் சென்னை கமலா திரையரங்க வளாகத்தில் நடைபெற்ற விழாவில் வெளியிடப்பட்டது. இயக்குநர் பா. ரஞ்சித் முன்னோட்டத்தை வெளியிட, சிறப்பு விருந்தினர்கள் மற்றும் படக்குழுவினர் பெற்றுக் கொண்டனர்.

அறிமுக இயக்குநர் எஸ். ஜே. அர்ஜுன் இயக்கத்தில் உருவாகி இருக்கும் 'சூது கவ்வும் 2' திரைப்படத்தில் மிர்ச்சி சிவா, ஹரிஷா ஜஸ்டின், வாகை சந்திரசேகர், ராதா ரவி, எம். எஸ். பாஸ்கர், அருள்தாஸ், கல்கி, கராத்தே கார்த்தி உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். கார்த்திக் தில்லை ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த திரைப்படத்திற்கு எட்வின் லூயிஸ் விஸ்வநாத் மற்றும் ஹரி எஸ். ஆர். ஆகியோர் இணைந்து இசை அமைத்திருக்கிறார்கள். இந்தத் திரைப்படத்தை திருக்குமரன் என்டர்டெய்ன்மென்ட் நிறுவனம் மற்றும் தங்கம் சினிமாஸ் நிறுவனங்கள் சார்பில் சி. வி. குமார் மற்றும் எஸ் .தங்கராஜ் இணைந்து தயாரித்திருக்கிறார்கள். இந்த திரைப்படத்தை தமிழகம் முழுவதும் சண்முகா ஃபிலிம்ஸ் கே. சுரேஷ் வெளியிடுகிறார்.

இம்மாதம் பதிமூன்றாம் தேதியன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகும் இப்படத்தின் முன்னோட்டம் மற்றும் வெளியீட்டுக்கு முன்னரான நிகழ்வில் இயக்குநர்கள் பா. ரஞ்சித், கார்த்திக் சுப்புராஜ், நலன் குமாரசாமி, ஆர். ரவிக்குமார், ஏ ஆர் கே சரவணன், நடிகர் பாபி சிம்ஹா உள்ளிட்ட பல முன்னணி திரையுலக பிரபலங்கள் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். இவர்களுடன் இயக்குநர் எஸ். ஜே. அர்ஜுன், ஒளிப்பதிவாளர் கார்த்திக் தில்லை, இசையமைப்பாளர் எட்வின் லூயிஸ் விஸ்வநாத், படத்தொகுப்பாளர் இக்னேஷியஸ், கலை இயக்குநர் சுரேந்தர், நடிகர்கள் வாகை சந்திரசேகர், மிர்ச்சி சிவா, அருள்தாஸ், ஹரிஷா ஜஸ்டின், கருணாகரன், கல்கி, கராத்தே கார்த்தி உள்ளிட்ட படக்குழுவினர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வின் தொடக்கமாக 'சூது கவ்வும் 2 ' படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமாகும் எட்வின் லூயிஸ் விஸ்வநாத் மேடை ஏறி இப்படத்தில் இடம்பெற்ற பாடல்களை பாடி, பார்வையாளர்களை உற்சாகப்படுத்தினார். இதனைத் தொடர்ந்து படத்தின் முன்னோட்டம் வெளியிடப்பட்டது.

நடிகர் மிர்ச்சி சிவா பேசுகையில், "தயாரிப்பாளர் சி வி குமாரும், இயக்குநர் அர்ஜுனும் என்னை சந்தித்தனர். சூது கவ்வும் படத்தின் இரண்டாம் பாகத்தை உருவாக்க திட்டமிட்டு இருக்கிறோம் என்றனர். இந்தப் படத்திற்கு நலன் குமாரசாமி ஒரு அவுட்லைனை சொல்லி இருக்கிறார், அதனை நாங்கள் விரிவுபடுத்தி இருக்கிறோம் என இயக்குநர் அர்ஜுன் முழு கதையையும் சொன்னார், நன்றாக இருந்தது. தயாரிப்பாளர் சி வி குமார் தமிழ் சினிமாவின் சொத்து. அவர் ஒரு பல்கலைக்கழகம். அந்தப் பல்கலைக்கழகத்தில் வசதி இல்லை என்றாலும் திறமையான மாணவர்களை உருவாக்கியிருக்கிறார். சினிமாவை அளவு கடந்து நேசிப்பவர். இன்னும் நிறைய புதுமுக திறமைசாலிகளை அறிமுகப்படுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்து அவர் படங்களை தயாரிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். தயாரிப்பாளர் தங்கராஜ் தங்கமான மனிதர். படப்பிடிப்பு முழுவதும் சுவையான உணவை வழங்கினார். இந்தப் படத்திற்கான சம்பளம் காசோலையாக எனக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இப்படத்தின் ஓடிடி உரிமை, சாட்டிலைட் உரிமை ஆகியவை விற்பனையான பிறகு சம்பளம் கிடைக்கும் என சொல்லி இருக்கிறார்கள். அதனை நினைவூட்ட விரும்புகிறேன். இந்த படத்தில் வாகை சந்திரசேகருடன் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அது மறக்க முடியாத அனுபவம். இந்த படத்தின் இசையமைப்பாளர் எட்வின் லூயிஸ் அற்புதமான திறமைசாலி. அவருக்கு சிறந்த எதிர்காலம் இருக்கிறது வாழ்த்துகள்," என்றார்.

# புதிய டைனமிக் ஃபண்டை அறிமுகம் செய்யும் சாம்கோ மியூச்சுவல் ஃபண்ட்

கோயம்புத்தூர், 04 டிசம்பர் 2024: சாம்கோ சொத்து மேலாண்மை நிறுவனம் இன்று தங்களது மல்டி அசெட் அலோகேஷன் ஃபண்டின் புதிய நிதிச் சலுகையை அறிவித்துள்ளது, இது டிசம்பர் 4, 2024 அன்று தொடங்கி டிசம்பர் 18, 2024 அன்று முடிவடைகிறது. இந்த புதிய நிதி மூலோபாய ரீதியாக ஒதுக்கீடுகளை மாற்றுவதன் மூலம் ஈக்விட்டிகள், தங்கம் மற்றும் கடன் ஆகியவை வருவாயை மேம்படுத்தவும் ஆபத்தைக் குறைக்கிறது. இந்தத் திட்டத்தில் குறைந்தபட்ச விண்ணப்பத் தொகை ரூ.5,000 ஆகும். இந்த புதிய நிதி பங்குசந்தை சிறப்பாக செயல்படும் போது ஈக்விட்டி சந்தையில் முதலீடு செய்யும், பங்குச்சந்தை சுணக்கமான நேரங்களில் தங்கம் மற்றும் கடன் சந்தையில் முதலீடு செய்யும் தனியுரிம சுழற்சி உத்தியான ரொட்டேட் ஆல் இயக்கபடுகிறது.

புதிய நிதி அறிமுகம் குறித்து சாம்கோ அசெட் மேனேஜ்மென்ட் பிரைவேட் லிமிடெட்டின் தலைமை நிர்வாக அதிகாரி விராஜ் காந்தி கூறுகையில், "சாம்கோவில், மாறும் முதலீட்டின் சக்தியை நாங்கள் நம்புகிறோம். எங்கள் நிதியானது பாரம்பரிய நிலையான ஒதுக்கீடு உத்திகளைப் போலன்றி, நிகழ்நேர சந்தை நிலைமைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட தனித்துவமான சுழற்சி மாதிரியை அடிப்படையாகக் கொண்டது. சந்தைப் போக்குகள் மற்றும் ஏற்ற இறக்கத்தின் அடிப்படையில் சொத்து வகுப்புகள் முழுவதும் மறுஒதுக்கீடு செய்வதன் மூலம், நிலையான செயல்திறனை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம் - வீழ்ச்சியின் போது முதலீட்டாளர்களைப் பாதுகாக்கும் அதே வேளையில் ஏற்றத்தில் வாய்ப்புகளை அதிகப்படுத்துகிறோம்." என்று கூறினார்.

இந்த நிதியானது திருமதி. நீராலி பன்சாலி, திரு. உமேஷ்குமார் மேத்தா மற்றும் திரு. தவால் கன்ஷ்யாம் தனானி உட்பட அனுபவமுள்ள முதலீட்டு நிபுணர்களின் குழுவால் கூட்டாக நிர்வகிக்கப்படும். அவர்களின் கூட்டு நிபுணத்துவம் மற்றும் மூலோபாய அணுகுமுறை நிதியின் புதுமையான சுழலும் உத்தியை செயல்படுத்துவதில் கருவியாக இருக்கும், இது ஒரு மாறும் மற்றும் பதிலளிக்கக்கூடிய முதலீட்டு அணுகுமுறையை உறுதி செய்யும்.

சாம்கோ அசெட் மேனேஜ்மென்ட் பிரைவேட் லிமிடெட்டின் தலைமை முதலீட்டு அதிகாரி திரு. உமேஷ்குமார் மேத்தா கூறுகையில், "சந்தை சுழற்சிகள் மேக்ரோ பொருளாதார மாற்றங்கள் மற்றும் மாறும் உணர்வுகளால் இயக்கப்படுகின்றன. சாம்கோ பல சொத்து ஒதுக்கீடு நிதியானது ஆபத்தை நிர்வகிப்பதற்கும் வாய்ப்புகளை கைப்பற்றுவதற்கும் ஒதுக்கீடுகளை மாற்றியமைக்கிறது, இதன் மூலம் ஒரு மென்மையான செல்வத்தை உருவாக்கும் அனுபவத்தை வழங்குகிறது. இந்த மூலோபாயம் முதலீட்டாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்." என்று கூறினார்.

65% நிஃப்டி 50 மொத்த குறியீட்டு வருமானம், 20% கிரெடிட் ரேட்டிங் இன்ஃபர்மேஷன் சர்வீசஸ் ஆஃப் இந்தியா லிமிடெட் ஷார்ட் டெர்ம் பாண்ட் ஃபண்ட் இன்டெக்ஸ், 10% தங்கத்தின் உள்நாட்டு விலை மற்றும் 5% வெள்ளியின் உள்நாட்டு விலை ஆகியவற்றை உள்ளடக்கிய பெஞ்ச்மார்க் குறியீட்டை இந்த ஃபண்ட் கண்காணிக்கும். சாம்கோ மல்டி அசெட் அலோகேஷன் ஃபண்ட் மற்றும் புதிய ஃபண்ட் ஆஃபர் பற்றிய கூடுதல் தகவலுக்கு, https://www.samcomf.com/mutual-funds/samco-multi-asset-allocation-fund-direct-growth/madgg என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkural@gmail.com
உள்ளது உள்ளபடி



# நிதியாண்டு '25 இன் பண்டிகைக் காலத்தில் மோட்டார் இன்சூரன்ஸ் பாலிசிகளில் 200% வளர்ச்சியை டர்ட்டில்மிண்ட் அறிவிக்கிறது

சென்னை, 04 டிசம்பர் 2024: ஒரு முன்னணி இன்சூர்டெக் தளமான டர்ட்டில்மிண்ட், நிதியாண்டு '25 இன் பண்டிகைக் காலத்தில் அதன் வாகனக் காப்பீட்டு வணிகத்தில் ஏற்பட்ட ஒரு எழுச்சியின் விளைவாக அதிவேக வளர்ச்சியை கண்டுள்ளது. இந்த நிறுவனம், கடந்த ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் விற்பனையில் கிட்டத்தட்ட 2 மடங்கு அதிகரிப்பைக் குறிக்கின்ற வகையில், அதன் விரிவான காப்பீட்டு ஆலோசகர்களின் நெட்வொர்க் மூலம் 4 இலட்சத்திற்கும் அதிகமான மோட்டார் இன்சூரன்ஸ் பாலிசிகளை வழங்கியுள்ளது. நிதியாண்டு 25 க்கான டர்ட்டில்மிண்ட் இன் தரவுகளின்படி, ஆகஸ்ட் முதல் அக்டோபர் வரையிலான காலக்கட்டத்தில் வாகனக் காப்பீட்டுக்கான மொத்த பிரீமியம் கடந்த ஆண்டை விட 2.3 மடங்கு அதிகரித்துள்ளது.

அடுக்கு 2 மற்றும் 3 நகரங்கள் மோட்டார் காப்பீட்டுக்கான ஒரு முக்கியமான வளர்ச்சி ஊக்கியாக உருவாகியுள்ளன என்று தரவுகளின் ஒரு நெருக்கமான ஆய்வு தெரிவிக்கிறது. விற்கப்பட்ட பாலிசிகளின் எண்ணிக்கை மற்றும் பிரீமியம் தொகையில் 90%க்கும் அதிகமாக இந்த பிராந்தியங்கள் பங்களித்தன. தள்ளுபடிகள் மற்றும் சலுகைகள் மூலம் வாகன விற்பனையில் சாதனை படைத்த இந்த விழாக் காலம், மோட்டார் இன்சூரன்ஸ் வாங்குதலிலும் ஒரு வலுவான அதிகரிப்புடன் ஒத்துப்போகிறது. எஃப்ஏடிஏ தரவுகளின்படி, 2023 ஆம் ஆண்டில் இந்தியா வாகன சில்லறை விற்பனையில் ஒரு 19% வளர்ச்சியைக் கண்டது, இது வாகனக் காப்பீட்டிற்கான சமமான வலுவான தேவையைத் தூண்டியது. டர்ட்டில்மிண்ட், அதன் ஆலோசகர் நெட்வொர்க் மற்றும் டிஜிட்டல் அணுகலைப் பயன்படுத்தி, இந்தியா முழுவதும் உள்ள வாடிக்கையாளர்கள், குறிப்பாக அரை நகர்ப்புற மற்றும் கிராமப்புற சந்தைகளில் போதுமான அளவில் காப்பீடு செய்யப்படுவதை உறுதி செய்வதன் மூலம், இந்த பண்டிகை வேகத்தை பயன்படுத்திக் கொண்டது.

இந்த கண்டுபிடிப்புகள் இந்தியாவின் பல்வேறு பிராந்தியங்களில் வாகனக் காப்பீட்டின் தேவை அதிகரித்து வருவதை முக்கியப்படுத்திக் காட்டுகின்றன.

டர்ட்டில்மிண்ட் நிறுவனத்தின் இணை நிறுவனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி திரேந்திர மஹ்யவன்ஷி கருத்துத் தெரிவிக்கையில், "இந்த பண்டிகைக் காலம் எப்போதுமே வாகன விற்பனைக்கு ஒரு முக்கியமான காலமாகும், மேலும் இந்த ஆண்டு எங்கள் தளத்தில் மோட்டார் இன்சூரன்ஸ் பாலிசிகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை நாங்கள் கண்டுள்ளோம். வாகனக் காப்பீடு ஒரு கணிசமான பங்களிப்பாளராக இருப்பதுடன், இந்தியாவின் இன்சூரன்ஸ் துறை ஒரு வளர்ச்சிப் பாதையில் உள்ளது. எங்களின் வாகனக் காப்பீடு விற்பனையில் ஒரு 85% ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியை நாங்கள் ஏற்கனவே கண்டு வருகிறோம். எங்கள் டிஜிட்டல்-முதல் அணுகுமுறை மற்றும் விரிவான காப்பீட்டு நெட்வொர்க்குடன், அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்வதற்கும், நாடு முழுவதும் உள்ள வாகன உரிமையாளர்களுக்கு நிதிப் பாதுகாப்பை வழங்குவதற்கும் காப்பீட்டு ஆலோசகர்களை ஆதரிப்பதற்கு டர்ட்டில்மிண்ட் சிறந்த நிலையில் உள்ளது. சீசன் தொடரும்போது, குறிப்பாக ஆண்டு இறுதி வரை, வலுவான வாகன விற்பனை மற்றும் பிராந்தியங்களில் விரைவாக அளவிடும் எங்கள் திறனால் ஆதரிக்கப்படுகின்ற தொடர்ந்த வேகத்தை நாங்கள் எதிர்பார்க்கிறோம்." என்று கூறினார்.

வாகன உரிமையை அதிகரிப்பதன் மூலமும், காப்பீட்டின் இந்த முக்கியத்துவம் பற்றிய அதிகரித்த விழிப்புணர்வினாலும் உந்தப்படுகின்ற அடுக்கு 2 மற்றும் அடுக்கு 3 நகரங்களில் விற்கப்படும் காப்பீடுகளின் இந்த கணிசமான அதிகரிப்பு, இந்த பிராந்தியங்கள் வாகனக் காப்பீட்டிற்கான முக்கியமான வளர்ச்சிப் பகுதிகளாக மாறி வருகின்றன என்பதை குறித்துக் காட்டுகிறது. இந்த பிராந்தியங்களில் அதன் ஆலோசகர் வலையமைப்பை விரிவுபடுத்துவதில் டர்ட்டில்மிண்ட் இன் மூலோபாய கவனம், அதன் டிஜிட்டல்-முதல் அணுகுமுறையுடன் இணைந்து, பயன்படுத்தப்படாத இந்த சந்தை திறனைப் பயன்படுத்த இந்த நிறுவனத்தை நிலைநிறுத்துகிறது.

இந்த வளர்ந்து வரும் சந்தையைப் பயன்படுத்துவதை நோக்கமாகக்கொண்ட ஆலோசகர்களுக்கு, வாகனக் காப்பீட்டை விற்கும் வாய்ப்பு பெரியதாக இருந்ததில்லை. டர்ட்டில்மிண்ட் இன் வலுவான இருப்பு மற்றும் ஆதரவுடன், ஆலோசகர்கள் தங்கள் திறனை அதிகரிக்கலாம் மற்றும் அதிகமான வாடிக்கையாளர்கள் தங்கள் வாகனங்களைப் பாதுகாக்க உதவலாம்.

# ஹெச்.என்.ஐ. மற்றும் என்.ஆர்.ஐ. வாடிக்கையாளர்களுக்கு மேம்பட்ட சொத்து மேலாண்மை சேவைகளை வழங்குவதற்காக டிபிஎஸ் வங்கி தனது ஆசிய அளவிலான நெட்வொர்க் மற்றும் டிஜிட்டல் நிபுணத்துவத்தைப் பயன்படுத்துகிறது!




சென்னை, 04 டிசம்பர் 2024: டிபிஎஸ் வங்கி, இந்தியாவில் உள்ள தனது வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு அம்சங்கள் அடங்கிய மேம்பட்ட சொத்து மேலாண்மை சேவைகளை அறிவித்துள்ளது. டிபிஎஸ் வங்கி தற்போது வழங்கி வரும் சேவைகளோடு, என்.ஆர்.ஐ.கள் மற்றும் ஹெச்.என்.ஐ.களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் புதிய, டிஜிட்டல் தொழில்நுட்பத்தினால் மேம்படுத்தப்பட்ட அம்சங்களுடன் மேம்பட்ட சேவையை அறிமுகப்படுத்துகிறது. இந்தியாவின் தொழில்நுட்ப மையங்களில் ஒன்றாகத் திகழும் பெங்களூருவில் உள்ள இந்திராநகரில் டிபிஎஸ் வங்கி தனது மூன்றாவது உயர் தர சேவைக் கிளையைத் திறந்திருப்பதன் மூலம் தனது செயல்பாடுகளை மேலும் வலுப்படுத்தி இருக்கிறது. இதன் மூலம் ஹெச்என்ஐ மற்றும் என் ஆர் ஐ வாடிக்கையாளர்களுக்கு ஏராளமான சிறப்பு வசதிகளுடன், நாடு கடந்த தீர்வுகளையும் வழங்குகிறது. இதன் தொடர்ச்சியாக ஹெச்.என்.ஐ மற்றும் என்.ஆர்.ஐ வாடிக்கையாளர்கள் இனி உள்நாட்டு மற்றும் உலகளாவிய வங்கிச் சேவைகளைப் பெறமுடியும். புதிய கிளையின் ஆரம்பம் மூலம், பெங்களூருவில் ஏற்கனவே வங்கி சேவைகளை அளித்துவரும் 26 டிபிஎஸ் கிளைகளின் பட்டியல் விரிவுப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தியாவில் டிபிஎஸ் வங்கி செயல்பாடுகளில் பெங்களூருவுக்கு இருக்கும் முக்கியத்துவத்தை இது அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில் அமைந்திருக்கிறது.

வரலாற்றில் குறிப்பிட்டு சொல்லுமளவிற்கு மிகப்பெருமளவில் இந்தியாவில் நிதிச்செல்வம் அதிகரித்து இருக்கிறது. 2023-ம் ஆண்டில் சுமார் 588 பில்லியன் அமெரிக்க டாலர்கள் அளவிற்கு நிதிச்செல்வம் இந்தியாவில் உருவாகியுள்ளது. இது வருகிற 2028.-ம் ஆண்டுவாக்கில் சுமார் 730 பில்லியன் அமெரிக்க டாலர்கள் அளவிற்கு நிதிச்செல்வம் ஈட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. செல்வச் செழிப்பில் உருவாகியிருக்கும் இந்த அதிகரிப்பு, புதிய வாடிக்கையாளர் தேவைகளுக்கான அவசியத்திற்கும் வழிவகுத்திருக்கிறது. மேலும் உலகளவில் பல்வேறு நாடுகளில் வசிக்கும் இந்தியர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன் இணைத்து பார்க்கப்படுகிறது. இதனால் தனிப்பட்ட, வணிகம் மற்றும் வாழ்க்கை முறை ஆகியவற்றில் வாடிக்கையாளர்களின் விருப்பங்களை அடிப்படையாக கொண்ட தனிப்பயனாக்கப்பட்ட தீர்வுகளுக்கான தேவை வெகுவாக அதிகரித்துள்ளது.

டிபிஎஸ் வங்கி ஆசியா முழுவதும் தனது செயல்பாடுகளை ஒருங்கிணைத்து மேம்படுத்தியுள்ளது. மேலும் அதன் மேம்பட்ட டிஜிட்டல் திறன்கள் பல்வேறு சிறப்பு சேவைகளையும் வசதிகளையும் பிரத்தியேகமாக வடிவமைத்து வருகின்றன. இதன் மூலம் இந்திய ரூபாய் மதிப்பில் 30 லட்சத்திற்கும் மேல் மதிப்புடைய டிபிஎஸ் ட்ரெஷர்ஸ் வாடிக்கையாளர்களுக்கு ஒரு முழுமையான வங்கி-வாடிக்கையாளர் உறவை அளிக்கிறது. இதன் தொடர்ச்சியாக தனிப்பயனாக்கப்பட்ட செல்வ மேலாண்மை தீர்வுகளின் முழுத் தொகுப்பையும் பெறுவதற்கான வாய்ப்புகளையும் வழங்குகிறது. மேம்பட்ட சேவைகளை வழங்கும் வகையில் அனுபவம் வாய்ந்த உறவு மேலாளர்கள், பிரத்தியேக சேவைகள் மற்றும் நம்பகமான டிபிஎஸ் நெட்வொர்க்கின் நன்மைகள் என பல அம்சங்களை டிபிஎஸ் வாடிக்கையாளர்கள் பெறமுடியும். சிங்கப்பூர், ஹாங்காங், தைவான், இந்தோனேஷியா, இந்தியா மற்றும் சீனா ஆகிய ஆறு முக்கிய டிபிஎஸ் சந்தைகளில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு சர்வதேச நிதி பரிமாற்றங்களுக்கான முன்னுரிமை அளிக்கும் வகையிலான எஃப் எக்ஸ் விகிதங்கள், குறைந்த சேவைக் கட்டணம் மற்றும் ஏடிஎம்-களில் பணம் எடுப்பதற்கு பூஜ்ஜிய கட்டணம் உள்ளிட்ட முழுமையான சிறப்பு சலுகைகளும் வழங்கப்படுகின்றன. 2023-ம் ஆண்டில், டிபிஎஸ் வங்கி தனது சூப்பர்-பிரீமியம், சிறப்பு அழைப்பு அனுமதி இருந்தால் மட்டுமே பெறக்கூடிய கிரெடிட் கார்டை இந்தியாவில் அறிமுகப்படுத்தியது. இந்த டிபிஎஸ் வாண்டேஜ் கார்ட், அதிக நிகர மதிப்புள்ள வாடிக்கையாளர்கள் மற்றும் சர்வதேச பயணிகளுக்கு பிரத்தியேக சலுகைகளை வழங்குகிறது. இந்த கார்ட் அளிக்கும் பயன்களில் சர்வதேச அளவில் செலவிடும் ஒவ்வொரு 200 ரூபாய்க்கும் 8 வாண்டேஜ் புள்ளிகள், சிங்கப்பூரில் மேற்கொள்ளும் சர்வதேச பரிவர்த்தனைகளில் பூஜ்ய அந்நிய செலாவணி மார்க்-அப் மற்றும் இதர இடங்களில் செய்யப்படும் பரிவர்த்தனைகளுக்கு 1.75% குறைந்த அந்நிய செலாவணி மார்க்-அப் போன்ற சிறப்பு பலன்களும் அடங்கும்.

டிபிஎஸ் வங்கி தனது புதிய என் ஆர் ஐ வாடிக்கையாளர்களுக்கு ஆன்லைன் கணக்கு தொடங்கும் அனுபவத்தில் முன்னோடியாக திகழ்கிறது. இவர்கள் ஒரு மணி நேரத்திற்குள்ளாக [ ஆவணங்கள் சமர்ப்பிப்பது தவிர்த்து] தங்களது புதிய கணக்கை தொடங்குவதற்கான அனைத்து செயல்முறைகளையும் முடித்துவிட உதவுகிறது. புதிய வாடிக்கையாளராக தங்களுக்கான வங்கி சேவைகளைத் தங்குதடையின்றி தொடர புதிய வரையறைகளை உருவாக்கி இருக்கிறது. பல்வேறு இடங்களில் வசிக்கும் வாழ்க்கை முறையின் தேவைகளுக்கு ஏற்ப, உலகெங்கிலும் வாழும் இந்தியர்கள் நேரடியாக பார்த்து தெரிந்து கொள்ளும் வியூ-ஆக்சஸ் வசதியுடன் தங்களது டிபிஎஸ் சேமிப்புக் கணக்கைத் தொடங்கலாம். அதேபோல் டிபிஎஸ் மொபைல் அப்ளிகேஷன் பிளாட்ஃபார்ம் மூலம் தங்கள் விண்ணப்பத்தின் நிலையையும் கண்காணிக்கவும் முடியும். வியூ ஆக்சஸ் வசதியானது, நிதி எடுப்பதைத் தவிர, சேமிப்புக் கணக்கின் செயல்பாடுகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது. கட்டாய ஆவணங்கள் அனைத்தும் சமர்ப்பிக்கப்பட்டவுடன், வாடிக்கையாளர்கள் முழு கணக்குக்கான செயல்பாட்டின் மூலம் பணப்பரிவர்த்தனை செய்யலாம் மற்றும் பணத்தைத் திரும்ப எடுக்கலாம். புதிதாக நெறிப்படுத்தப்பட்ட டிபிஎஸ் வங்கியின் இந்த செயல்முறை, என்.ஆர்.ஐ. வங்கி சேவைகளை எளிதில் பெறுவதிலும், மேம்பட்ட சௌகரியங்களுக்கான ஒரு முக்கிய முன்னேற்றமாக அமைந்திருக்கிறது. மேலும் இது காகித ஆவணங்கள் மற்றும் கணக்கு தொடர்பாக பின் தொடரவேண்டிய செயல்முறைகளுக்கு எடுத்து கொள்ளும் நேரத்தையும், முயற்சியையும் வெகுவாக குறைக்கிறது. இதையடுத்து வங்கி - வாடிக்கையாளர் இடையேயான அனுபவத்தை மிகவும் மேம்பட்டதாக, தங்கு தடையில்லாத ஒன்றாக உறுதி செய்கிறது.

டிபிஎஸ் வங்கி இந்தியாவின் வெல்த் மேனேஜ்மென்ட் மற்றும் ட்ரெஷர்ஸ் பிரிவின் தலைவர் ரிச்சா திரிபாதி கூறுகையில், "30 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவில் நாங்கள் செயல்பட்டு வருகிறோம். இதன் மூலம் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள உயர் நிகர மதிப்புள்ள இந்தியர்களின், எதிர்பார்புகளை விருப்பங்களைப் பற்றிய ஆழ்ந்த புரிதலை டிபிஎஸ் வங்கி கொண்டிருக்கிறது. இந்தியாவில் செல்வத்தை உருவாக்கும் முறை என்பது மிகவும் பரவலாக்கப்பட்ட ஒன்றாகி இருக்கிறது. இதனால் ஒவ்வொரு பிராந்தியங்களிலும் வலுவான செயல்பாடுகள் கொண்டிருப்பது அவசியமாகி இருக்கிறது. டிபிஎஸ் வங்கி இந்தியாவின் கிளைகளின் தொடர் செயல்பாடுகள் மிகப்பரவலான, மாபெரும் நெட்வொர்காக இருப்பதோடு, மேம்பட்ட டிஜிட்டல் நிபுணத்துவத்துடன் இணைந்து, அதன் 'ஃபிஜிட்டல்' செயல்பாட்டு உத்தியை மேலும் வலுவுள்ளதாக்கி இருக்கிறது. இது இந்தியாவில் மிக துரிதமாக வளர்ச்சி கண்டுவரும் புதிய செல்வங்களுக்கான மேலாண்மையை விரிவான முறையில் சேவை மேற்கொள்ள உதவுகிறது. அதே நேரத்தில், பெங்களூருவின் தொழில் முனைவோர் சூழலும், முதலீட்டுச் செல்வங்களின் மதிப்பில் உண்டாகி வரும் அதிகரிப்பும் எங்கள் பிரீமியம் வங்கி தயாரிப்புகள் மற்றும் பலதரப்பட்ட சேவைகளை முன்னோடித்துவத்துடன் செயல்படுத்துவதற்கு மிகச்சிறந்த சந்தையாக இருக்கிறது.

பெங்களூரில் உள்ள புதிய சிக்னேச்சர் டிபிஎஸ் கிளையானது, டிபிஎஸ் வங்கி இந்தியாவின் செல்வ செழிப்புடன் வசதியாக இருக்கும் வாடிக்கையாளர்கள், என் ஆர் ஐ வாடிக்கையாளர்கள் மற்றும் வணிக உரிமையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் மிகவும் பிரத்தியேகமான சேவைகளை வழங்கும். என்.ஆர்.ஐ.களுக்கு என டிபிஎஸ் வங்கி இந்தியா அறிமுகப்படுத்தி இருக்கும் ஆன்லைன் மூலம் வங்கி கணக்கைத் தொடங்குவதற்கான தீர்வு, தடையற்ற, இருப்பிடம் பற்றிய கவலை இல்லாத அனுபவத்தை வழங்குவதன் மூலம் மேலும் அதிக மதிப்பை பெற அவர்களுக்கு உதவுகிறது.

இந்தியாவை அடித்தளமாக கொண்டு ஆசியா செல்வ மதிப்பில் வளர்ச்சி கண்டு வரும் மையமாக இருக்கிறது. மேலும் தென்கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய வங்கியாக இருக்கும் டிபிஎஸ் வங்கி, இந்திய மற்றும் என் ஆர் ஐ வாடிக்கையாளர்களுக்கு ஆசியாவில் நாங்கள் கொண்டிருக்கும் தொடர் செயல்பாடுகளின் மூலம் அனைத்து நன்மைகளையும், பயன்களையும் கொண்டு வர நாங்கள் உறுதியுடன் செயல்பட்டு வருகிறோம்." என்றார்.

# பயிற்சி காவல்துறை இயக்குநர் சந்தீப்ராய்ரத்தோர், அனைத்து பயிற்சிப் பள்ளிகளின் புதிதாகச் சேர்ந்தவர்களுக்கு சீர்மிகு காவலராக வாழ்த்துக்களை கூறி மேலும் பயிற்சிக் காவலர்களுக்கான சில அறிவுரைகளையும் வழங்கினார்



சென்னை, 04 டிசம்பர் 2024: தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வாணையம் தமிழ்நாடு காவல்துறைக்கு இரண்டாம்நிலை காவலர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்வு நடத்தி, அதன் படி மொத்தம் 2665 நபர்கள் அதில் ஆயுதப்படைப் பிரிவுக்கு பெண்களும் மற்றும் தமிழ்நாடு சிறப்பு காவல்படை பிரிவுக்கு ஆண்களும் இரண்டாம் நிலை காவலர்களாக தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கான பணி நியமன ஆணையானது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த 27.11.2024 அன்று வழங்கப்பட்டது. புதிதாக தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு 7 மாத கால அடிப்படை பயிற்சியும் மற்றும் ஒரு மாத கால நடைமுறை பயிற்சியும் அளிப்பதற்காக திருவள்ளூர், வேலூர், விழுப்புரம், திருச்சி, சேலம், கோவை, மதுரை மற்றும் தூத்துக்குடி ஆகிய 8 நிரந்தர காவலர் பயிற்சி பள்ளிகளில் ஆயத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு, நேற்று 03.12.2024 அன்று பெண் பயிற்சிக் காவலர்கள் திருவள்ளூர், வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய காவலர் பயிற்சிப் பள்ளிகளிலும், ஆண் பயிற்சிக் காவலர்கள் மதுரை, தூத்துக்குடி, சேலம், திருச்சி மற்றும் கோவை பயிற்சி பள்ளிகளிலும் அறிக்கை செய்தனர். இன்று 04.12.2024 பயிற்சி தொடங்கியதை முன்னிட்டு காவல்துறை இயக்குநர் (பயிற்சி), திரு. சந்தீப்ராய்ரத்தோர், இ.கா.ப., அவர்கள் அனைத்து பயிற்சிப் பள்ளிகளின் புதிதாகச் சேர்ந்தவர்களுக்கு காணொலி மூலமாக உரையாடல் நடத்தி அவர்கள் திறம்பட பயிற்சியை முடித்து சீர்மிகு காவலராக சமுதாயத்தில் அடியெடுத்து வைக்க வேண்டும் என்று தனது வாழ்த்துக்களை கூறி மேலும் பயிற்சிக் காவலர்களுக்கான சில அறிவுரைகளையும் வழங்கினார். இந்த காணொலி கலந்தாய்வின் போது உயரதிகாரிகள் சென்னை தலைமையகத்திலிருந்து திருமதி. எம். வி. ஜெய கௌரி, இ.கா.ப., காவல்துறை தலைவர் (பயிற்சி) தூத்துக்குடியிலிருந்தும், முனைவர். ஐ. ஆனி விஜயா, இ.கா.ப., காவல்துறை துணைத் தலைவர் (பயிற்சி) விழுப்புரத்திலிருந்தும், திருமதி. ச. ப. லாவண்யா, காவல் கண்காணப்பாளர் (பயிற்சி தலைமையகம்) வேலூர் மற்றும் திருமதி. கா. மகேஷ்வரி, காவல் கண்காணப்பாளர் (பயிற்சி - தூத்துக்குடி) திருவள்ளூரிலிருந்தும் மற்றும் அனைத்து பயிற்சி பள்ளியின் முதல்வர்கள், துணை முதல்வர்கள், கவாத்து போதகர்கள் மற்றும் சட்ட போதகர்களும் கலந்துக்கொண்டனர்.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
புதன், டிசம்பர் 04, 2024

# தென்னிந்திய சினிமாவின் அடையாளமான சில்க் ஸ்மிதாவின் வாழ்க்கை வரலாற்று திரைப்படத்தை எஸ் டி ஆர் ஐ சினிமாஸ் பெருமையுடன் அறிவித்துள்ளது

சென்னை, 04 டிசம்பர் 2024: பழம்பெரும் நடிகை சில்க் ஸ்மிதாவின் பிறந்தநாளை முன்னிட்டு, எஸ் டி ஆர் ஐ சினிமாஸ் தனது வரவிருக்கும் திரைப்படமான "சில்க் ஸ்மிதா ரூ குயின் ஆஃப் தி சவுத்" திரைப்படத்தை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைந்துள்ளது.



இந்த அதிகாரப்பூர்வ வாழ்க்கை வரலாறு, நடிகை சில்க் ஸ்மிதாவின் வசீகரிக்கும் கதையை உயிர்ப்பிக்கும். இதில் சந்திரிகா ரவி பெயரிடப்பட்ட பாத்திரத்தில் நடிக்கிறார்.

ஜெயராம் சங்கரன் இயக்கத்தில், எஸ்.பி விஜய் அமிர்தராஜ் தயாரிப்பில், 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இந்தப் படம் தயாரிப்பைத் தொடங்க உள்ளது.

அவரது பிறந்தநாளில் இந்த சிறப்பு அறிவிப்பைக் குறிக்கும் வகையில், தயாரிப்பாளர்கள் ஒரு பிரத்யேக வீடியோவை வெளியிட்டுள்ளனர், இது பார்வையாளர்களுக்கு காந்தக்கண்ணழகி - சில்க் ஸ்மிதாவைப் பற்றிய ஒரு பார்வையை அளிக்கிறது.

# 25 வருட சேவையைக் கொண்டாடும் அதானி வில்மரின் ஃபார்ச்சூன் ஃபுட்ஸ்.. வெளியான புதிய லோகோ !

சென்னை, 04 டிசம்பர் 2024: இந்தியாவின் மிகப்பெரிய உணவு மற்றும் திவிசிநி நிறுவனங்களில் ஒன்றான அதானி வில்மார் லிமிடெட் நிறுவனத்தின் பிராண்டான ஃபார்ச்சூன் ஃபுட்ஸ் ஆனது 25 ஆண்டுகாலத்தை நிறைவு செய்துள்ளது. இந்திய குடும்பங்களுக்கு வீட்டில் சமைத்த உணவுகளை வழங்கும் பிராண்டின் அர்ப்பணிப்பு மற்றும் அதன் நினைவாக புதிய லோகோ வடிவமைக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. அதில், ‘கர் கா கானா, கர் கா கானா ஹோதா ஹை’ எனும் உணவு சார்ந்த தத்துவமும் லோகோவை அலங்கரிக்கிறது. பல ஆண்டுகளாக, இந்த பிராண்ட் சமையல் எண்ணெய், கோதுமை மாவு, ரவா, மைதா, சுஜி, பீசன், அரிசி மற்றும் பருப்பு வகைகள் உள்ளிட்ட அத்தியாவசிய சமையலறை பொருட்களை வழங்கும் இந்தியாவின் மிகவும் புகழ்பெற்ற மற்றும் நம்பகமான வழங்குநர்களில் ஒன்றாக மாறியுள்ளது. ருசியான, சத்தான மற்றும் ஆரோக்கியமான உணவுடன் குடும்பங்களை ஒன்றிணைப்பதில் இது ஒரு முக்கிய பங்கைக் கொண்டுள்ளது, இதனால் இந்திய குடும்பங்களில் அங்கமாக இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.




வடிவமைக்கப்பட்ட லோகோ ஆனது, பிராண்டுடன் தொடர்புடைய 25 ஆண்டுகால பாரம்பரியம் மற்றும் ஒற்றுமையை வெளிக்கொணர்கிறது. அதன்படி, வடிவமைப்பு இந்தியாவின் சமையல் மரபுகளைப் பற்றிய நுண்ணறிவை வழங்குகிறது. இது இந்திய சமையல் கலாச்சாரத்தின் கூறுகளை உள்ளடக்கியது. அறுவடை செய்யும் கருவிகள், இனிப்புகளின் வடிவங்கள், சமையல் பாத்திரங்களின் வடிவங்கள் மற்றும் இந்திய சமையலறைகளில் காணப்படும் பல்வேறு நறுமணங்கள் மற்றும் சம்பிரதாயங்களின் உணர்வு அனுபவமாகும். அரிசி, காய்கறிகள், எண்ணெய், மாவு, இட்லி, சமோசா, இனிப்புகள், தட்கா, ரோலிங்-பின், சாந்து மற்றும் பீஸ், டிபன் பாக்ஸ் என ஒவ்வொன்றும் ஒவ்வொரு காட்சிப் பொருட்களும் தயாரிக்கும் பொருட்கள், சமையல் ஊடகங்கள் மற்றும் நடைமுறைகளைக் குறிக்கின்றன. இந்திய அனுபவத்தின் மையமான வீட்டில் சமைத்த உணவு எனும் பெருமைக்குரியது என்பதே இதன் அர்த்தமாகும்.

இந்திய சமையலறைகளின் சாரத்தை பிரதிபலிப்பதோடு மட்டுமல்லாமல், லோகோவில் உள்ள கூறுகள் ஆரோக்கியம், மகிழ்ச்சி மற்றும் வீட்டில் தயாரிக்கப்பட்ட ஆரோக்கியமான உணவுக்கான எனும் அர்ப்பணிப்பு ஆகியவற்றையும் பிரதிபலிக்கின்றன. இந்த தனித்துவமான வடிவமைப்பு, இந்திய குடும்பங்களுக்கு ஊட்டமளிக்கும், வீட்டில் சமைத்த உணவை பரிமாறும் பார்ச்சூனின் பயணத்தை கொண்டாடுகிறது. தவிர, பாரம்பரியத்துடன் தரத்தை தடையின்றி கலக்கிறது.

அதானி வில்மர் லிமிடெட் நிறுவனத்தின் எம்.டி & சி.இ.ஓ., அங்ஷு மல்லிக் பேசுகையில், “25 ஆண்டுகளாக, ஃபார்ச்சூன் ஃபுட்ஸ் இந்திய குடும்பங்களின் அங்கமாக பிணைக்கப்பட்டு, நாடு முழுவதும் உள்ள சமையலறைகளில் நம்பகமான பெயராக மாறியுள்ளது. இந்த பயணம் அசாதாரணமானது அல்ல - மில்லியன் கணக்கான குடும்பங்களின் அன்பு, நம்பிக்கை மற்றும் பகிரப்பட்ட மதிப்புகளின் பிரதிபலிப்பு, அவர்கள் அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக எங்களைத் தேர்ந்தெடுத்துள்ளனர். எங்கள் லோகோ இந்த அழகான உறவை உள்ளடக்கியது. சுவைகள் மற்றும் பாரம்பரியங்கள் ஆகியவற்றைக் கொண்டாடுகிறது, இது வீட்டில் சமைத்த உணவை இந்திய கலாச்சாரத்தின் ஒரு மூலக்கல்லாக மாற்றுகிறது. இந்த வெள்ளி விழாவைக் கொண்டாடும் போது, தரம், ஊட்டச்சத்து மற்றும் வீட்டில் சமைப்பதில் மகிழ்ச்சியை வழங்குவதற்கான புதுப்பிக்கப்பட்ட அர்ப்பணிப்புடன் எதிர்காலத்தை நோக்கிப் பார்க்கும்போது கடந்த காலத்தை மதிக்கிறோம். இது ஒரு மைல்கல்லை விட அதிகம்; இது பகிரப்பட்ட தருணங்களின் சக்தி மற்றும் பார்ச்சூன் மற்றும் நாங்கள் சேவை செய்யும் குடும்பங்களுக்கு இடையிலான நீடித்த பிணைப்புக்கு ஒரு சான்றாகும்” என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

# வரதராஜபுரம் மற்றும் எருமையூரில் வெள்ளபாதிப்பு நிகழாமல்தடுக்க அவசர நடவடிக்கை அவசியம்

சென்னை, 04 டிசம்பர் 2024: சென்னை பெருநகர மேம்பாட்டு வாரியத்தின் கீழ், சென்னை பெருநகரின் ஒரு அங்கமாக தாம்பரத்திலிருந்து வெறும் 3 முதல் 4 கி.மீ. தூரத்திற்குள் அமைந்துள்ள வரதராஜபுரம் மற்றும் எருமையூர் என்ற இரு கிராமங்களில் வசிக்கும் மக்கள், ஒவ்வொரு ஆண்டும் மழைகாலத்தின்போது வெள்ள பாதிப்பையும், ஒழுங்குமுறைப்படுத்தப்படாத நிலமேம்பாடு நடவடிக்கைகளினால் கடும்சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர். இது தொடர்பாக அதிகாரிகளுக்கு பல முறை வேண்டுகோள்களும், மனுக்களும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற போதிலும் கூட தொடர்ந்து மோசமாகிவரும் சூழ்நிலைக்கு நல்ல தீர்வு காண உருப்படியான எந்த நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை என்பது வருந்தத்தக்கது. இந்த கிராமங்களில் வசிக்கும் நூற்றுக்கணக்கான குடும்பங்களின் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக இப்பிரச்சனைகள் இருந்துவருகின்றன.






பிரச்சனையின்பின்னணி

வெளிவட்டச்சாலையின் (ஓ ஆர் ஆர்) பகுதி மற்றும் அடையாறு ஆற்றின் மேற்குப்பகுதியில் அமைந்துள்ள இக்கிராமங்கள், குறிப்பாக, ராயப்பாநகர் இந்த பருவமழைக்காலத்தின் போது மழைவெள்ள நீரால்சூழப்பட்டு, தத்தளிக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து நிகழ்ந்துவரும் இப்பிரச்சனை கீழ்க்கண்ட காரணங்களால் கடுமையான பாதிப்பை ஏற்படுத்துகிறது: 1.மழை நீர் மற்றும் வெள்ள நீர் இயற்கையான முறையில் வடிந்து அடையாறு ஆற்றுக்குள் செல்வதை தடை செய்வதாக வெளிவட்டச்சாலை இருக்கிறது மற்றும் இதன் கீழ் நீர் செல்வதற்காக போதுமான சிறுபாலங்கள் அமைக்கப்படவில்லை. 2.கிஷ்கிந்தா - தாம்பரம் சாலை நெடுகிலும் மழைநீர் வடிகால்கள் அமைக்கப்படாததால் முறையான வெளியேறல் வழி இல்லாமல் மழை நீரானது, குடியிருப்பு பகுதிகளை சூழ்ந்து பல நாட்களுக்கு நீர் வடியாமல், வெள்ள பாதிப்பை ஏற்படுத்துகிறது. இப்பிரச்சனையை மேலும் மோசமாக்கும் வகையில், வரதராஜபுரம் மற்றும் எருமையூரின் ஒரிஜினல் குடியிருப்பு பகுதிகளையொட்டி தாழ்வான பகுதிகளில் புதிதாக 96 ஏக்கர்கள் நிலப்பரப்பில் ஒரு குடியிருப்பு மனைப்பிரிவு உருவாக்கப்பட்டு வருகிறது. தரைமட்டத்தை 7 முதல் 12 அடிவரை உயர்த்தும் அளவிற்கு மிகப் பெரிய அளவில் மண் இப்பகுதியில் கொட்டப்பட்டு வருகிறது, இயற்கையாக தண்ணீர் வடியும் வாய்க்கால்கள் பலவற்றை இந்த நடவடிக்கை மண்ணுக்குள் புதைத்திருக்கிறது. புல எண்கள் 447, 445, 454, 444 மற்றும் பிறவற்றில் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ள பலசிற்றாறுகள் மற்றும் ஓடைகள் இதில் உள்ளடங்கும். இந்த தண்ணீர் வாய்க்கால்களும், ஓடைகளும் அடைக்கப்பட்டிருப்பது, இதுவரை வெள்ள பாதிப்பின்றி பாதுகாப்பாக இருந்த குடியிருப்பு பகுதிகளுக்கு மழை வெள்ள நீர் திசை திருப்பிவிடப்படுவதற் வழிவகுத்திருக்கிறது. இதன்காரணமாக, மேடான பகுதிகள் கூட இப்போது வெள்ளத்தால் பாதிக்கப்படுபவையா மாற்றப்பட்டிருக்கின்றன. உள்ளூர் சமூகங்கள் மீது பாதிப்பு

ஒழுங்குமுறைப்படுத்தாத இந்த நிலமேம்பாடுதிட்டம், பேராபத்தை உண்டாக்கும் விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது: மழை நீர் சூழ்வதால், ஏற்படசாத்தியமுள்ள பேரழிவை தவிர்ப்பதற்காக இப்பகுதியில் உள்ள பள்ளிகள், அவைகளின் தரைத்தளங்களை காலி செய்யுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றன. எம்.ஜி.ஆர் சாலை, பஜனை கோவில் தெரு, அம்பேத்கார் சாலை, முனுசாமி சாலை, ஜைடிகோ லே அவுட், ஓம் சக்தி நகர் ஆகியவை உட்பட, பலமுக்கியமான குடியிருப்புபகுதிகள், கடுமையான வெள்ள பாதிப்பை எதிர்கொள்ளும் ஆபத்தில் இப்போது இருக்கின்றன. கிராம கோவில் மற்றும் அங்கன்வாடி உட்பட, உள்ளூர் அளவிலான உட்கட்டமைப்பு வசதிகள், மழைவெள்ள நீரினால் மோசமான ஆபத்தை இப்போது எதிர்கொள்கின்றன. இதுவரை தாழ்வாக இருந்த பகுதியில் புதிதாக மிகப்பெரியமனைப்பிரிவு உருவாக்கப்படுவதன் காரணமாக இதுவரை கிராமத்தில் மேடான பகுதியில் அமைந்திருந்த குடியிருப்புகள் திடீரென வெள்ளநீர் சூழக்கூடிய தாழ்வான பகுதியாக இப்போது மாறி இருக்கின்றன. குடியிருப்பாளர்களின் கோரிக்கைகள்

கடும் ஆபத்தையும், பெரும் சிரமத்தையும் எதிர்கொள்கின்ற வரதராஜபுரம் மற்றும் எருமையூர் கிராமங்களில் வசிக்கும் மக்கள், இப்பிரச்சனைகளுக்கு தீர்வு காண உடனடியாகவும் மற்றும் நிரந்தர தீர்வு வழங்குமாறும் உரிய நடவடிக்கைகளை எடுக்க அரசையும், பிற அதிகார அமைப்புகளையும் வலியுறுத்தி கேட்டுக்கொள்கின்றனர்: 1.அடையாறு ஆற்றில் வெள்ளப்பெருக்கை தடுக்க கான்கிரீட் சுவர்கள் கட்ட வேண்டும்.

2.மழை மற்றும் வெள்ள நீர் தடையின்றி ஓடுவதற்கு ஓ ஆர் ஆர் -ன் கீழ் போதுமான மதகுகளை / சிறுபாலங்களை அமைக்கவும்.

3.பொதுப்பணித் துறை கிஷ்கிந்தா-தாம்பரம் சாலையில் மழைநீர் கால்வாய்களை உருவாக்கி, அடையாறு ஆற்றுக்குள் பாதுகாப்பாக தண்ணீர் செல்வதை உறுதிசெய்ய வேண்டும்.

4.பல ஆண்டுகளாக இருந்து வரும் ஒரிஜினல் குடியிருப்புகளை வெள்ளத்தில் இருந்து பாதுகாக்க புதிதாக உருவாக்கப்படுகின்ற மனைப்பிரிவில் புதைந்துபோன இயற்கையான நீர் வழித்தடங்களை மீண்டும் திறந்து மீண்டும் செயல்பாட்டிற்கு கொண்டுவரவும்.

உடனடி நடவடிக்கைக்கான அறைகூவல்

மாநிலம் எங்கிலும் வெள்ள பாதிப்பை தடுக்கும் நடவடிக்கைகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முன்னுரிமை அளித்துவரும் நிலையில், மாநிலத்தின் தலைநகரான சென்னையில் இந்த பிரச்சனை தீர்வுகாணப்படாமல் விடப்பட்டிருப்பது வியப்பையும், வருத்தத்தையும் அளிக்கிறது. உரிய நடவடிக்கைகளின் மூலம் பேராபத்து நிகழாமல் தடுக்கக்கூடிய இப்பிரச்னைக்கு துரித நடவடிக்கைகளை அரசும், உள்ளாட்சி அமைப்புகளும் எடுக்கவேண்டும் என்று குடியிருப்பாளர்கள் வலியுறுத்தி கேட்டுக்கொண்டுள்ளனர். வெள்ள நீர் பாதிப்பிலிருந்து குடிமக்களை பாதுகாக்கின்ற கடமையும், பொறுப்பும் அரசுக்கு இருப்பதை இத்தருணத்தில் சுட்டிக்காட்ட நாங்கள் விரும்புகிறோம். இதற்கான பொறுப்பு வகிக்கும் அதிகார அமைப்புகள், ஊடகத்தினர் மற்றும் பொது மக்களின் கவனத்தை இந்த வேண்டுகோள் ஈர்க்கும் மற்றும் பேராபத்து நிகழ்வதற்கு முன்பு உரிய தீர்வுகளை அரசு வழங்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.